செ.வெ.எண்:34 நாள்:18.09.2020

**கரூர் மாவட்டம்**

**பத்திரிக்கைச் செய்தி**

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் பள்ளி சத்துணவு மைய அமைப்பாளர் மற்றும் சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான நேரடி நியமனம் நடைபெறுவதால் தகுதியுள்ளவர்கள் விண்ணப்பித்து பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

கரூர் மாவட்டத்தில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் பள்ளி சத்துணவு மையங்களில் ஏற்பட்டுள்ள 158 அமைப்பாளர் மற்றும் 264 சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் நிரப்பிட பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் பின்வரும் தகுதிகளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அமைப்பாளர் பணிக்கு கல்வித் தகுதி பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், பழங்குடியினர் எட்டாவது தேர்ச்சி / தோல்வி பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர்களுக்கு குறிப்பிட்ட தேதியில் 21 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். பழங்குடியினர் 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.மாற்றுத்திறனாளிகள் 43 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும்.

சமையல் உதவியாளர் பணிக்கு கல்வித் தகுதி பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் 5ம் வகுப்பு தேர்ச்சி (அ) தேர்ச்சி பெறாதவர்கள். பழங்குடியினர் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும். வயது வரம்பு பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் ஆகியோர்களுக்கு குறிப்பிட்ட தேதியில் 21 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். பழங்குடியினர் 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்

காலியாகவுள்ள பணியிடங்கள் அரசாணையின்படி நிரப்பப்படும். கல்வித்தகுதி, இருப்பிடம், சாதி, விதவை/கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் இதர முன்னுரிமை ஆகியவற்றுக்கான ஆதாரச்சான்று நகல் கண்டிப்பாக இணைக்கப்படவேண்டும்.

நியமன பணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்பிற்கும் இடையே உள்ள தூரம் 3கி.மீ-க்குள் இருக்க வேண்டும். காலியிடமுள்ள பள்ளி, பள்ளிகளுக்கான இனசுழற்சி விவரம், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம்/நகராட்சி அலுவலகங்களில் ஒட்டப்பட்டிருக்கும். விண்ணப்ப நகல் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் இலவசமாக கிடைக்கும்.

வயது வரம்பு, 31.08.2020ம் தேதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 24.09.020 முதல் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய / நகராட்சி ஆணையர்களுக்கு 30.09.2020ம் தேதி முடிய அலுவலக வேலை நேரத்திற்குள் கிடைக்கப்பெறும் வகையில் அனுப்பப்படவேண்டும் எனவும் இதற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**